தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மன்மத, புரட்டாசி 6, திருவள்ளுவர் ஆண்டு–2046

2015 செப்டம்பர் 23, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்."

நோய் இன்னதென்று ஆராய்ந்து, அதன் அடிப்படைக் காரணத்தையும் ஆய்ந்து, முதலில் அதனைத் தீர்க்கும் வழியை ஆய்ந்து, அதை உடலுக்கு ஏற்றவாறு அறிந்து செய்வதே சிறந்த மருத்துவம் ஆகும்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 327, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

327—

கூட்டுறவு நூற்பாலை

***63122—திரு. ஆர். சாமி:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, மேலூரிலுள்ள மதுரை மாவட்ட கூட்டுறவு நூற்பாலையை மீண்டும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சாதனை என்றால் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) சரித்திரம் என்றால் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா. சகாப்தம் என்றால் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா. தமிழக மக்களின் காவலராகத் திகழும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மதுரை மாவட்டம், மேலூர் தொகுதி, மேலூரில் 1965 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட கூட்டுறவு நூற்பாலை, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் நிருவாகச் சீர்கேட்டினால் 4–9–1999 முதல் செயல்படாமல் இருந்து, மூடப்பட்டு விட்டது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் அந்தத் தொழிலாளர்களுக்கு உரிய தொகைகளைக் கொடுத்து, அவர்களுக்கான நிவாரணத்தை வழங்கினார்கள். இந்த ஆலையை மீண்டும் திறப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.*

திரு. ஆர். சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், கழகத்தினுடைய நிரந்தரப் பொதுச் செயலாளர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

மதுரை மாவட்டம், மேலூரில் இயங்கி வந்த கூட்டுறவு நூற்பாலை தமிழ்நாட்டிலேயே மிகவும் பெரிய கூட்டுறவு நூற்பாலையாக இருந்ததோடு, நேரடியாக 1,500 பேருக்கும், மறைமுகமாக 2,000 பேருக்குமேலும் வேலை இதன்மூலம் கிடைத்தது. ஏறத்தாழ 3,500 பேர் வேலை பார்த்துப் பிழைத்து வந்தார்கள். கடந்த 1999 ஆம் ஆண்டு புண்ணியவான்கள் நல்லாட்சி நடத்திய தி.மு.க. ஆட்சியில் அதை இழுத்து மூடி, தொழிலாளர்களை நடுரோட்டில் தள்ளினார்கள். (குறுக்கீடுகள்) அதில் ஒன்றும் தப்பில்லை. உங்கள் ஆட்சியில்தான் மூடப்பட்டது. நல்ல புண்ணியவான்கள் ஆட்சியில்தான், 3,500 பேர் வேலை

2015 செப்டம்பர் 23]

பார்த்த நூற்பாலை மூடப்பட்டது. (குறுக்கீடுகள்) நல்ல புண்ணியவான்கள் ஆட்சி என்று சொல்லாமல் எப்படிச் சொல்வது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி, துணைக் கேள்வி கேளுங்கள். (குறுக்கீடு)*

திரு. ஆர். சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆமாம். 1999 ஆம் ஆண்டு யார் ஆட்சி நடந்தது? (குறுக்கீடுகள்) தி.மு.க. ஆட்சிதான் 1999-ல் இருந்தது. உங்கள் கருணாநிதிதான் முதலமைச்சராக இருந்தார். (குறுக்கீடுகள்) அந்த மில்லை பூட்டி, சாவியை எடுத்து, தொழிலாளர்கள் அத்தனை பேரையும் வெளியே தள்ளியது உங்கள் ஆட்சியிலேதான். (மேசையைத் தட்டும் ஒலி) வேறு ஆட்சியில் என்றால், பேசுங்கள். 1999 ஆம் ஆண்டு யார் தமிழ்நாட்டில் ஆட்சியில் இருந்தது? முதலமைச்சராக யார் இருந்தது? சொல்லுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி, கேள்வி நேரத்தில் கேள்வியைக் கேளுங்கள். கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு வேண்டாம். கேள்வி கேளுங்கள்.*

திரு. ஆர். சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. ஆர். சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றச்சாட்டுகள் ஒன்றும் கிடையாது. திரு. சிவசங்கர்தான் எப்போது பார்த்தாலும் ஊடுருவல் செய்து கொண்டே இருக்கிறார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3,500 பேர் வேலை பார்த்த மில்லை மூடிவிட்டு, ஆட்களை ரோட்டில் விட்டார்கள். 2001 ஆம் ஆண்டில் மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராக வந்தவுடனே, இதை மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்த பிறகு, அந்தத் தொழிலாளர்களுக்கு என்னென்ன நிவாரணம் வழங்க வேண்டுமோ அதையெல்லாம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, மாண்புமிகு தமிழ்நாடு*

முதலமைச்சர் அம்மா அவர்கள் இந்தியாவிலேயே இல்லாத அளவிற்கு தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் சிறப்பாகக் கொண்டு சென்று கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நாடு சுதந்திரம் அடைந்ததற்குப் பிறகு, குறிப்பாக, தென் மாவட்டங்களிலே தொழில் வளர்ச்சியைக் கொண்டு வருவதற்காகவும், தென் மாவட்ட மக்களின் வளர்ச்சிக்காகவும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்தான் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இந்த நிலையில், இந்தக் கூட்டுறவு நூற்பாலையைத் தொடங்கவோ, இல்லையென்றால் வேறு ஏதாவது ஒரு தொழிற்சாலையைக் கொண்டு வரவோ நடவடிக்கை எடுக்க வேண்டும். 100 ஏக்கர் இடம் அங்கு இருக்கின்றது. மேலும், பல கோடி ரூபாய் மதிப்புள்ள கட்டடங்கள் அங்கே பூட்டிக் கிடக்கின்றன. அந்தக் கட்டடங்களையும், அந்த இடத்தையும் பயன்படுத்தி வேறு ஏதாவது ஒரு தொழிற்சாலை தொடங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள்மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–05

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், மேலூரில் 24,528 நூற்புக் கதிர்களுடன் 1965 ஆம் ஆண்டு மதுரை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை தொடங்கப்பட்டது. கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் அது மூடப்பட்டது. பின்பு, அந்த ஆலையில் பணிபுரிந்த 261 தொழிலாளர்கள் வேலை இழந்த காரணத்தினால், சட்டபூர்வமாக அவர்களுக்கு வழங்க வேண்டிய ஓய்வூதியத் தொகையான ரூபாய் 2 கோடியே 57 இலட்சத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு வழங்கியது. மேலும், இந்த ஆலை 48.76 ஏக்கர் பரப்பளவில் அமைந்திருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலேதான், தொழிலாளர்களுக்கு வேலை வழங்க வேண்டும் என்ற எண்ணத்தில், 48.76 ஏக்கரில் 21.92 ஏக்கர் நிலம் 2.73 கோடி ரூபாய்க்கு தொழில் துறைக்கு, அதாவது TAMIN—கனிம வள நிறுவனத்திற்கு விற்கப்பட்டு, அங்கு கிரானைட் பாலிஷிங் யூனிட் இயங்கி வருகின்றது. அதன்மூலமாக அந்தப் பகுதியிலே உள்ள

2015 செப்டம்பர் 23]

தொழிலாளர்களுக்கு வேலை வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உலகத் தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தினார்கள். அதற்கு தென் பகுதியின் வளர்ச்சிக்காக பல்வேறு முதலீட்டாளர்கள் அழைக்கப்பட்டனர். அதிலே கைத்தறி மற்றும் துணிநூல் சம்பந்தப்பட்ட முதலீட்டாளர்களிடம் பேசி, இயங்காமல் இருக்கக்கூடிய அந்த ஆலைகளையெல்லாம் காண்பித்து, தனியார் முதலீட்டோடு அந்த நூற்பாலைகளை இயங்கச் செய்யவோ அல்லது அது தொடர்பான ஏதாவது ஒரு பணியை மேற்கொள்வதற்கோ மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட கப்பியறை பேரூராட்சி, கஞ்சிக்குழி பகுதியிலே ஒரு நூற்பாலை இயங்கிக் கொண்டிருந்தது. ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் அதில் உறுப்பினர்களாக இருந்தார்கள். ஆனால், தற்போது அந்த நூற்பாலை இயங்கவில்லை. அந்தத் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளது. அந்தப் பகுதியிலே அந்த நூற்பாலையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, அந்த நூற்பாலையும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான் மூடப்பட்டது. இன்றைக்கு கன்னியாகுமரி மாவட்டம், ஆரல்வாய்மொழியிலே இருக்கக்கூடிய மற்றொரு ஆலைக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 28 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, புதிய* machineries *எல்லாம் கொடுத்து, கடந்த ஆட்சியின் நிருவாகச் சீர்கேட்டினால் மூடக்கூடிய நிலையில் இருந்ததை மாற்றியுள்ளார்கள். (மேசையைத்*

தட்டும் ஒலி) அந்தப் பணிகளெல்லாம் தற்போது முடிந்து, கூடுதலான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கக்கூடிய நிலை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் தெரிவித்து, அந்தப் பகுதியிலே உள்ள கைத்தறி, நெசவாளர் சமுதாயத்திற்கு வேலைவாய்ப்பு வழங்கக்கூடிய வகையிலே ஆபத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 328, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

328—

புதிய மாணவர் விடுதி

***35989—திரு. பொன். ராஜா:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், மீஞ்சூர் பகுதியிலுள்ள ஆதி திராவிடர் நலப் பள்ளிக்கு புதிய மாணவர் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி சட்டமன்றத் தொகுதி, மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மீஞ்சூர் பகுதியில் ஆதி திராவிடர் நலப் பள்ளி மாணவர் விடுதிக்கான புதிய கட்டடம் கட்டப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால், 25–6–2013 அன்று துவக்கி வைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டுவிட்டது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.